

# “சம உரிமையை சாத்தியமாக்கியது தி.மு.க!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இரு வண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் மூன்றாம் அமர்வில் ‘கட்டைவிரல் கேட்டால் பட்டை உரியும்’ என்னும் தலைப்பில், கழக மாணவர் அணிச் செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி அவர்கள் ஆற்றிய உரை:**



வழக்கறிஞர்
**இரா.ராஜீவ்காந்தி**
கழக மாணவர் அணிச் செயலாளர்

*“பண்டு தொட்டுக் கொண்டு கொடுத்த இனம், உண்டு கொழுக்க வந்த கூட்டம் சிண்டு முடிந்து சீர்குலையவே, ஒரு சாதி தமிழ்ச் சாதி பல சாதி ஆனதே!*

*ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமெனில், அவன் உயர் சாதியினருக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து தலைக்குள்ளே வைத்தானா? மற்ற சாதியினருக்கு எல்லாம் மண்டைக்குள் வைத்ததென்ன களிமண்ணா, சுண்ணாம்பா?*

*கங்கையைப் போல் வடமொழியில் கவிதை தந்து, வால்மீகி வியாசன் எல்லாம் பிரம்மன் பெற்ற கால் பிள்ளைகளே. இளங்கோவன் யார்? கம்பன் யார்? கூத்தன் யார்? இவர்களெல்லாம் பிரம்மன் தலையிலே பிறக்கவில்லை! ஆனாலும், தமிழ் மொழியின் இமயங்கள்.*

*எதற்காகத் திறமை, அது தேவையா என நான் கேட்க மாட்டேன். ஆனாலும், எம் ஏகலைவன் வித்தை கற்கும்போது, இந்த சாஸ்திரங்கள் அனுமதிக்கவில்லை. அவன் வில்லில் விஜயனை வெல்வான் என்று கட்டை விரலை, காணிக்கையாய் பெற்றது நியாயமா? சூத்திர சம்பூகன் தவம் செய்தான். அவனுக்கான தகுதியைக் கேட்டு, தலையை வெட்டிச் சாய்த்த ராமபிரான் வரலாறு அன்று” என்று தொடரும் கவிதையில்தான் கேட்டார் எங்கள் இனத்தின் தலைவர்*

*‘கட்டை விரலோ, காணிக்கையோ, இந்நாளில் எவன் கேட்டாலும், பட்டை உரியும்! அவன் கட்டை சுடுகாட்டில் வேகும்’ என்றார். இது ஏதோ கொலை செய்வதற்கான முயற்சி அல்ல.*

**இது வன்முறை அல்ல!**

*ஆண்டாண்டு காலமாய் ஒரு கூட்டம் எங்களைப் பார்த்து, ‘நீ காணிக்கையாய்க் கட்டைவிரலைக் கொடு’ என்று கேட்டபோது, ஆண்டாண்டு காலமாய் ஒரு கூட்டம் என் மொழியைப் பார்த்து, ‘உன் பாஷை நீசபாஷை’ என்று சொன்னபோது, ஆண்டாண்டு காலமாய் ஒரு கூட்டம், ‘நீ தொட்டால் தீட்டு’ என்று சொன்னபோது, எங்கள் தத்துவ மரபு மேலெழுந்து நின்றது. அந்தக் கொள்கை மேலெழுந்து நின்றதால்தான், எங்கள் தலைவர், ‘கட்டை விரலைக் காணிக்கையாய்க் கேட்டால், பட்டை உரியும்’ என்று முழக்கமிட்டார்.*

**பெரியாரின் பேரன்கள்!**

*நீங்கள் கட்டை விரலைக் கேட்டால், அமைதியாகத் திரும்பிப் போவதற்கு, எங்கள் தாத்தன் சம்பூகனும், ஏகலைவனும் போய்விட்டார்கள். ஆனால், பெரியாரின் பேரன்கள், பேரறிஞர் அண்ணாவின் பிள்ளைகள், தலைவர் கலைஞருடைய வழிவந்திருக்கிற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற இந்த அன்புத் தலைவர்களுடைய பிள்ளைகள் நாங்கள் இருக்கிறோம். தம்பிகளைத் தத்துவ மரபு கொண்டு வளர்க்கிற எங்கள் துணை முதலமைச்சர், எங்கள் திராவிடத் தீரர், எங்கள் அண்ணன் உதயநிதியின் ஒருங்கிணைப்பில், நாங்கள் இருக்கிறோம்.*

**சம வாய்ப்புகள் கேட்டோம்!**

*சம உரிமை (EQUALITY) என்பதை நாம் கேள்விப்பட்டிருப்போம். எல்லோருக்கும் சம உரிமை என்பது வேறு. ஆனால், சமவாய்ப்பைப் (EQUAL OPPORTUNITY) பேசுவதற்கு, ஓர் இயக்கத்துக்குத் தெம்பும் திராணியும் தேவைப்பட்டது. அதுதான் திராவிட இயக்கம்.*

*அந்த இயக்கம், எந்தக் கடவுளின் பெயரைச் சொல்லி, ‘நீ தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு, நீ நடந்தால் தீட்டு’ என்று சொன்னார்களோ. ‘அந்தக் கடவுளை வழிபடுகிற, கோயிலுக்குள் நுழையும் உரிமையை எனக்குக் கொடு’ என்று முதன்முதலில் கேட்ட இயக்கம் திராவிட இயக்கம்.*

*இந்தி இந்த நாட்டுக்கு வந்தபோது, எந்தச் சாஸ்திரங்களைப் படித்தவனும், எந்தப் பண்டிதரும், பக்தி இலக்கியம் எழுதியவர்கள் யாரும் வீதிக்கு வரவில்லை. ஆனால், எங்கள் திராவிட இயக்கத் தோழர்கள்தான் கருப்பு சிவப்புத் துண்டை அணிந்துகொண்டு, ‘இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?’ என்று எதிர்த்துப் போராடினோம். ‘செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின்னும் இந்த தேகம் இருந்தொரு லாபமுண்டோ?’ என்று போராடினோம்.*

*மொழியைப் பாதுகாக்கிற வேலையையும், அதேநேரம் பக்தி இலக்கியம் என்று சொல்லப்பட்டு எங்களால் தொடவே முடியாமல் இருந்த ஆலயங்களைப் பாதுகாக்கிற இரண்டு வேலைகளையும் இந்த திராவிட இயக்கம்தான் செய்தது.*

**சமநிலைச் சமுதாயம்**

*‘பட்டை உரியும், கட்டை வேகும்’ என்று சொல்வதெல்லாம் ஏதோ அடுத்தவன் உயிரை எடுப்பதற்கு அல்ல. நாங்கள் இந்தி வேண்டாம் என்று சொன்னோம். ஆனால், இந்தி பேசுகிற எந்தச் சகோதரரையும் தெருக்களில் நாங்கள் அடித்ததில்லை. இங்கு சாதியின் பெயரால் ஒருவர் உயர்ந்தவராக இருக்கிறார் என்பதற்காக, அந்தச் சாதியைச் சேர்ந்தவரை எந்தத் திராவிட இயக்கமும் அடித்ததில்லை. காரணம், நாங்கள் உங்களோடு சமமாக இருக்க விரும்புகிறோம், உங்களுக்கு நிகராக இருக்க விரும்புகிறோம் என்ற அந்தச் சமநிலைச் சமூகத்துக்காகத்தான் தொடர்ந்து இந்தத் திராவிட இயக்கம் இந்த மண்ணில் நின்றது.*

**இந்தியாவின் தலைவர் எங்கள் முதல்வர்!**

*இன்றைய காலகட்டத்தில், எம் மொழி மீதும், எம் மாநிலத்தின் மீதும், எங்கள் சுயமரியாதை மீதும் நீங்கள் தாக்குதல் நடத்துகிறபோது, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் ஒரு தத்துவத்தைக் கொண்டு வழிநடத்துவதற்கு எங்கள் முதலமைச்சர், எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரு தத்துவத்தை முன்வைக்கிறார்.*

*‘சாதி ரீதியாக இட ஒதுக்கீடு கேட்கிறீர்கள், சாதியை நீங்கதானே வளர்க்கிறீர்கள்?’ என்று பலர் சொன்னபோது, ‘இந்தியச் சமூகத்தில் எந்தச் சாதியால் ஒடுக்கப்பட்டானோ, எந்தச் சாதியால் வீழ்த்தப்பட்டானோ, எந்தச் சாதியால் வாய்ப்பு மறுக்கப்பட்டதோ, அந்தச் சாதியால் இட ஒதுக்கீடு வேண்டும்’ என்ற ஒரு புதிய பார்வையை, நாங்கள்தான் இந்தச் சமூகத்துக்குக் கொடுத்தோம்.*

*இன்று இந்தியச் சமூகம் தமிழ்நாட்டிலிருந்து கற்றுக்கொள்கிறது. இந்தியா என்கிற நாடு பல்வேறு மொழி பேசுகிற மக்கள் நாடாக இருக்கிறபோது, இந்தத் தமிழ்நாடு என்கிற மாநிலம்தான் மொழிப் பாதுகாப்பில், சமூகப் பாதுகாப்பில், மாநிலப் பாதுகாப்பில், ஏன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிற ‘வேற்றுமையில் ஒற்றுமை’யைப் பாதுகாக்கிற இடத்தில் இருக்கிறது. அதைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லும் ஓர் அளப்பரிய பணியை இன்றைய முதலமைச்சர், எங்கள் தலைவர் கையில் எடுத்திருக்கிறார்.*

*அன்பு கொண்ட தோழர்களே, இன்றைய ஒன்றிய அரசு நம்முடைய மொழி மீதும் நம் பண்பாட்டின் மீதும், நம் மாநிலத்தின் மீதும் தாக்குதல் நடத்துகிறபோது, நம்முடைய முன்னத்தி ஏர்களாய், முன்னோடித் தலைவர்களாக இருந்த தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் எந்தத் திராவிடத் தத்துவத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, எந்த மொழியை ஆயுதமாக எடுத்து, எந்தப் பண்பாட்டை ஆயுதமாக எடுத்து, களத்தில் நின்றார்களோ, அந்தத் தத்துவத்தின் வழிநின்று, இந்தியாவில் எத்தனையோ தத்துவங்கள் தோன்றி மறைந்திருந்தாலும், சமகாலத்தில் எல்லா தேசிய இனங்களும் ஏற்றுக்கொள்கிற தத்துவமாக எங்கள் திராவிடத் தத்துவம் இருக்கிறது. அதற்குத் தலைவராக எங்கள் மதிப்புமிகு முதலமைச்சர் இருக்கிறார்.*

*அந்தத் தத்துவத்தின் கரத்தை வலுப் படுத்துவதுதான், அன்றைய சம்பூகனுக்கான நீதியும், அன்றைய ஏகலைவனுக்கான நீதியும் ஆகும்.*

*இன்றைய ஒன்றிய அரசு, எங்கள் இனத்தைத் தாக்குகிறபோது, அதைத் தடுக்கும் கேடயமாக, திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. அந்தக் கழகத்தின் உயிர்நாடித் தலைவராக, எங்கள் தலைவரோடு நின்று எங்கள் உதயநிதி அண்ணன் நடத்துகிற இந்த அறிவுத் திருவிழா, இந்த அறிவுப் புரட்சி வெல்லட்டும்.”*

●





## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**தன்னாட்சித் தமிழகம் மற்றும் மொழி உரிமை நிகர்மைக் கூட்டியக்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளரும் பதிப்பாளருமான ‘ஆழி’ செந்தில்நாதன் எழுதிய முகநூல் பதிவில் இருந்து...**

‘வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் முற்போக்கு புத்தகக் காட்சியில், ‘ஆழி பதிப்பகம்’ பங்குபெறுகிறது.

தொடர்ச்சியாக நாம் வெளியிட்டுவரும் திராவிட இயக்கம் சார்ந்த நூல்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுவருகின்றன. குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவின் 32 நூல்களும், ‘1974 மாநில சுயாட்சி’ என்கிற தொகுப்பு நூலும் எப்போதும் போல அனைவரின் கவனங்களையும் ஈர்க்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, இப்படி ஒரு கருத்தமைவில் தனியாகப் புத்தகக் காட்சி நடத்த வேண்டும் என்று முடிவு செய்த தி.மு.க. இளைஞர் அணிக்கும் அதன் செயலாளரும் துணை முதல்வருமான திரு.உதயநிதி ஸ்டாலினுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி...

தமிழ்நாடெங்கும் தி.மு.க.-வால் பயிற்றுவிக்கப் பட்ட இளம் தலைமுறையினர் ஆர்வமாக வந்து, எல்லா அரங்குகளிலும் சென்று, நூல்களை எடுத்துப் பார்ப்பதும், தேர்ந்தெடுத்து வாங்குவதும் பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது..

எழுத்தால் எழுந்த திராவிட இயக்கம், ‘கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு’ என்று களம்கண்ட அண்ணாவின் பேரியக்கம் முற்போக்கு நூல்களுக்கு இவ்வாறு ஆதரவளிப்பதில் ஆச்சரியமில்லை.’